# "2020 க.பொ.த (உயர்/தர) மாணவர்களுக்கான வழிகாட்டல் இறுதிக் கருத்தரங்கு"

-மாதிரி வினாப்பத்திரம், விடையமைப்பு முறை, பரீட்சையின் போது அதிகம் கவனத்திற்கெள்ள வேண்டிய பகுதிகள், இலக்கண வினாக்களும் தெளிவுபடுத்தலும் கொண்டது-

# தமிழ்




இ.அநூஷன் [National Dip.in.Teach, B.Ed]

(தொடர்புக்கு : 0774323124

# கல்விப் பொதுத்தராதர (உயர்தர)ப் பரீட்சை இறுதிக்கருத்தரங்கு வினாத்தாள் - 2020

**T72 - தமிழ் I** "பகுதி II" மூன்று மணித்தியாலம் + 10 நிமிடங்கள்

**அறிவுறுத்தல்கள்.**

**பகுதி I இல் உள்ள இரு வினா**க்களுக்கும், **பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினா**க்களுக்கும் எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## "பகுதி I"

**01. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

(அ). "ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூ ணணிந்த யானை யியறேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினு நீட்டா தாயினும் **யானைதன்**
**கோட்டிடை வைத்த கவளம் போலக்**
கையகத் ததுவது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே."

i. இச் செய்யுளில் வெளிப்படும் மன்னனின் சிறப்புக்கள் எவை?
ii. தடித்த எழுத்திலுள்ள செய்யுளடியின் சிறப்பு யாது?, விளக்குக.
iii. மனதிற்கு புலவர் எடுத்துக்கூறும் ஆறுதல் வார்த்தை யாது?
iv. இடம்பெறும் உயிரளபெடைச் சொல்லை தருக.

(ஆ). "வயற்கலையின் உடையானை
மாசு அடைந்த மெய்யானை
நல் கலை இல் மதி என்ன
நகை இழந்த முகத்தானைக்
கல் கனியக் கனிகின்ற
துயரானைக் கண் உற்றான்
வில் கையின் நின்று இடைவீழ
விம்முற்று நின்று ஒழிந்தான்"

i. இச் செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தை தருக.
ii. இச் செய்யுளில் இடம்பெறும் பரதனின் இயல்புகள் எவை?
iii. இச் செய்யுளில் வெளிப்படும் குகனின் நிலை எத்தகையது?

(12 +12 = 24புள்ளிகள்)

**02.** 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ). மானிடத் தன்மையைக் கொண்டு - பலர்
வையத்தை ஆள்வது நாம் கண்டதுண்டு
மானிடத் தன்மையை நம்பி - அதன்
வன்மையினாற் புவி வாழிவு கொள் தம்பி!
“மானிடம் “ என்றொரு வாளும் - அதை
வசத்தில் அடைந்திட்ட உன்இரு தோளும்
வானும் வசப்பட வைக்கும் - இதில்
வைத்திடும் நம்பிக்கை , வாழ்வைப் பெருக்கும்
மானிடன் வாழ்ந்த வரைக்கும் - இந்த
வையத்திலே அவன் செய்த வரைக்கும்
மானிடத் தன்மைக்கு வேறாய் - ஒரு
வல்லமை கேட்டிருந்தால் அதைக் கூறாய்!
மானிடமென்பது புல்லோ? - அன்றி
மரக்கட்டை யைக்குறித் திடவந்த சொல்லோ?
கானிடை வாழ்ந்தது உண்டு - பின்பு
கடலை வசப்படச் செய்ததும் அது தான்!
மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு
மானிடம் தன்னைத்தன் உயிரும் வெறுக்கும்,
மானிடம் என்பது குன்று - தனில்
வாய்ந்த சமத்துவ உச்சியில் நின்று
மானிடருக்கினி தாக - இங்கு
வாய்த்த பகுத்தறி வாம்விழி யாலே
வான்திசை எங்கணும் நீ பார்? - வாழ்வின்
வல்லமை “மானிடத்தன்னை” என்றே தேர்

i. இக் கவிதையின் கருவை யாது?
ii. எதில் நம்பிக்கை வைத்து செயற்படுமாறு ஆசிரியர் அறைகூவல்விடுக்கிறார்?
iii. மானிடசக்தி எவ்வாறான அற்பமான விடயமல்ல என ஆசிரியர் விளக்குகிறார்?
iv. இக்கவிதையில் காணப்படும் உருவக அணிகளை குறிப்பிட்டு விளக்குக.

**அல்லது**

(ஆ). வையத்தில் மானுடன் வாழ்வாங்கு வாழ வழிகாண முற்பட்ட வள்ளுவன், இராமராச்சியம் என்ற கற்பனைக்கு அடிப்படையான இலட்சியமான அரசு ஒன்றை இலக்கியத்தில் உருவாக்கிய கம்பன் அறம், அரசியல், வாழ்க்கை இவற்றுக்கிடையே இருக்கக்கூடிய தொடர்பு எத்தகையது என்பதை குடிமக்கள் காப்பியம் ஒன்றின் மூலம் அலசி ஆராய்ந்த இளங்கோ ஆகியோரைப் பாரதி கண்டான். இம் மூவருமே தனி ஒரு அரசனைப் பற்றியோ, தெய்வத்தைப் பற்றியோ, வள்ளலைப் பற்றியோ அல்லது குறிப்பிட்ட குலம், சாதி என்பவற்றையோ பாடினார் அல்லர். மனுகுலம் பற்றியே பாடினார். “மானுடம் வென்றதம்மா” என்றே கம்பனும் குறிப்பிட்டான்.

தாம் வாழ்ந்த காலத்துச் சமுதாய நிறுவனங்களும் நியதிகளும் குறைபாடுடையவை என்னும் நம்பிக்கையுணர்வின் உந்துதலினாலேயே இப் பெருங் கவிஞர்கள் மானுடம் கேடின்றி வாழத்தக்க கற்பனை உலகுகளைப் படைக்க முற்பட்டனர். காலத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்த அவர்கள்,

காலத்தைக் கடந்து சிந்தித்தனர்; செயலாற்றினர். அதனாலேயே காலத்தை வென்ற கவிஞராகினர். வள்ளுவன் வகுத்த அறம் அவன் காலத்து நடைமுறைகளின் திரட்சி அன்று. மனிதன் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவன் விழைந்த சமுதாய நெறியை வடித்தான். தனது காலத்தின் அவலங்களையும் பிரச்சனைகளையும் உணர்வு பூர்வமாகவும் அறிவு பூர்வமாகவும் தெளிந்துகொள்ளும் ஒருவனே கால உணர்வுடன் செயற்பட முடியும். அவன் கூறும் முடிவுகள் பூரணமானவையாக அமையாமற் போகலாம். ஆனால் இவ்வுலகை மாற்றியமைக்க வேண்டும் என்ற உணர்வு தோன்றியவுடனேயே அவனது படைப்புக்களுக்குத் தனியாற்றல் பொருந்தி விடுகின்றது. அத்தகைய ஆற்றலை அளவுகோலாகக் கொண்டே பெருங்கவிஞர்களை இனங்கண்டு கொள்கின்றோம். அந்த முறையிலேயே வள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி முதலியோர் மகாகவிகள் என மதிக்கப்படுகின்றனர்.

இவ்வாண்டு தமிழ் கூறும் நல்லுலகம் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. உலகின் பல பகுதிகளில் பாரதிக்கு அஞ்சலி செலுத்தப் படுகின்றது. சில மொழிகளில் பாரதியின் ஆக்கங்கள் பெயர்க்கப்படுகின்றன. தமிழ்க் கவியாகத் தோன்றிய பாரதி, நாளடைவில் அனைத்திந்தியக் கவியாகவும் உலகப் பெருங்கவிஞருள் ஒருவனாகவும் ஏற்றுக்கொள்ளப்படும் நிலை எழுந்துள்ளது. இப்பெருமை பாரதிக்கு எவ்வாறு கிட்டியது? அவனது உள்ளார்ந்த ஆற்றலையும் உலக நோக்கையும் பலரும் உணரத் தொடங்கியதும் அவன் ஒரு மகாகவி என்னும் உண்மை உறுதிப்படலாயிற்று. இலக்கிய கர்த்தாக்களின் புகழுக்கும் பரிணாம வளர்ச்சி உண்டு.

i. இவ்வுரைப்பகுதியில் கூறப்படும் இலக்கிய கருத்தாக்களையும், அவர்களது இலக்கியங்களையும் தருக.

ii. காலத்தை வென்ற கவிஞர்கள் என மூன்று கவிஞர்களையும் குறிப்பிடக் காரணம் யாது?

iii. பாரதி ஏனைய கவிஞர்களைவிட எவ்வாறான சிறப்பை அடைகிறார்?

iv. இவ்வுரைப்பகுதியில் வெளிப்படும் ஆசிரியரின் மொழிநடைச்சிறப்பம்சங்கள் 04 தருக.

(4 × 4 = 16 புள்ளிகள்)

## பகுதி II )

**03. திருக்குறளில், சிற்றினஞ் சேராமை** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.

(அ). சிற்றினத்தை தவிர்த்து ஒழுகுதல்
(ஆ). இனம் கொண்டு தன்மையறிதல்
(இ). சிற்றினம் சேராமையின் சிறப்பு
(ஈ). சிற்றினத்தின் இழிவு
(உ). உவமையணிப் பயன்பாடு (20 புள்ளிகள்)

**04. குகப்படலத்தில்** பரதனும் தாய்மாரும் குகனுடன் கங்கையைக் கடத்தல் எனும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ). குகனின் பெருமைகள்
(ஆ). மூன்று தாய்மாரின் இயல்புகள்
(இ). பரதனின் சிறப்புக்களும், சினமும்
(ஈ). வெளிப்படும் அணிகள். (20 புள்ளிகள்)

**05. தேர்** எனும் சிறுகதையினை அடிப்படையாகக் கொண்டு

(அ). யாழ்ப்பாணத்து வாழ்வியல் அம்சங்களும், பண்பாடும்.

(ஆ). குமாரசாமி என்ற பாத்திரப்படைப்பு.

(இ). கதைக்கும் தலைப்பிற்குமிடையிலான பொருத்தப்பாடு என்பவற்றை ஆராய்க.

(20 புள்ளிகள்)

**06. தேம்பாவணி** எனும் இலக்கியத்தில் சாந்திக்கு ஏற்பட்ட ஐயங்களும் மரியாளின் பதிலுரையும் என்றப பகுதியில் வெளிப்படும்.

(அ). சாந்தினி இயேசுபிரான் பற்றி வினாவிய ஐயவினாக்கள்

(ஆ). மரியாள் கூறிய இயேசுபிரானின் சிறப்புக்கள்

(இ). வெளிப்படும் இயேசுபிரனனின் பெருமைகளும், பயன்பட்டுள்ள அணிகளையும் ஆராய்க.

(20 புள்ளிகள்)

**07. இருதுயரம்** என்ற நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு

(அ). மனோகரன் என்ற பாத்திரப் படைப்பு

(ஆ). நாடகத்தில் வெளிப்படும் இருவகையான துயரங்களையும் விபரிக்குக.

(இ). கதைக் கள வர்ணனை என்பவற்றை ஆராய்க.

(20 புள்ளிகள்)

**08.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ). **பாரதியார்** என்ற கவிதையில் வெளிப்படும் மகாகவி பாரதியின், கவிதைகளின் சிறப்புக்களை ஆராய்க.

(ஆ). **ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது** எனும் நாவலில் வலியுறுத்தப்படும் கல்வியின் அவசியம்.

(இ). **மணிமேகலை** இலக்கியத்தில் வெளிப்படும் அந்திமாலைப் பொழுதுக் காட்சிச் சிறப்பு

(ஈ). **இலங்கையாற்றுப்படை** இலக்கியத்தில் பெரிய மணல்மேடு இராமர் அணை எனக் கட்டுரையாசிரியர் முன்வைக்கும் காரணங்கள்.

(உ). **அகநானூற்றுப்** பாடலான 'படுமழை பொழிந்த' பாடலில் வெளிப்படும் முல்லைநிலம், கார்காலம் பற்றிய வர்ணனை.

(20 புள்ளிகள்)

அன்பென்று கொட்டு முரசே!

**அறிவுறுத்தல்கள்.**

பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களையும், பகுதி II இன் "**அ**" பிரிவிலிருந்து ஒரு வினாவையும் "**ஆ**" பிரிவிலிருந்து ஒரு வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## "பகுதி I"

**01. (அ) எல்லாவினாக்களுக்கும் விடை தருக. ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01. சகரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல் ( )
(1) கட்சி (2) சபை (3) சகடம் (4) சந்ததி (5) சகுணம்

02. மூன்று மெய்கள் மயங்கி வரும் சொல் ( )
(1) மங்கலம் (2) படர்க்கை (3) மடக்கை (4) பாப்பாத்தி (5) சத்தியம்

03. வளைநா ஒலி இடம்பெறும் சொல் ( )
(1) யாக்கை (2) கண்டம் (3) கற்பூரம் (4) பல்லவி (5) பந்தயம்

04. ஆக்கப் பெயர் அல்லாதது ( )
(1) அறிவாளி (2) காவற்காரன் (3) தேர்ச்சி (4) கெட்டித்தனம் (5) நீலவானம்

05. உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்த சொல் ( )
(1) தோசை (2) ஆசை (3) மாயை (4) தீயை (5) ஐயை

06. அவற்றுக்கு என்ற சொல்லின் சரியான சந்தி பிரிப்பு ( )
(1) அவை + அற்று + உக்கு (2) அவற்று + கு (3) அது + அற்று + கு
(4) அவை + கு (5) அவை + அற்று + கு

07. பெயரடையினை ஏற்காத சொல் ( )
(1) காட்சி (2) நீர் (3) ஆடுதல் (4) மரம் (5) அன்பு

08. கூட்டுவினையாக அமைவது ( )
(1) மின்சாரம் (2) குரைகடல (3) மலர்ச்சி (4) வெண்மணல் (5) வெற்றிபெறு

09. சொல்லிக் கொண்டு இருந்தார் - இதன் பகுதி ( )
(1) சொல் (2) சொல்லி (3) சொல்லிக்கொள் (4) சொல்லிக்கொண்டிரு (5) சொல்ல

10. அன்பினால் அகிலத்தை வெல்லலாம் - இதில் வந்துள்ள வேற்றுமைப் பொருள் ( )
(1) கருவி (2) கருத்தா (3) உடநிகழ்ச்சி (4) இடம் (5) நிபந்தனை

11. பொதுவினையாக அமைந்தவை ( )
(1) நட, வா (2) நில், எழு (3) கடி, உடை (4) எரி, முறி (5) படி, பிடி

12. வேற்றுமைத்தொகையாக அமைவது ( )
(1) சுடுசோறு (2) சிட்டுக்குருவி (3) பூஞ்சோலை (4) மூலப்பொருள் (5) இராப்பகல்

13. செயற்பாட்டு வினை விகுதிகள் ( )

(1) வி, பி (2) ஆய், ஈர் (3) க, இய (4) படு, உண் (5) ஆன், ஆர்

14. இரு துணைவினையாக அமைவது, ( )

(1) பணம் இருக்கிறது (2) வெளிநாட்டிலிருந்து வந்தார்

(3) ஊருக்குப் போயிருக்கிறார் (4) கதிரையில் இருந்தார் (5) இருப்பிடத்தில் இருந்தார்.

15. பால் கொடுத்த பிறகும் குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. இதில் உம் தரும் பொருள்( )

(1) எதிர்மறை (2) தெரிநிலை (3) ஐயம் (4) முற்று (5) மிகை

16. கடி எனும் உரிச்சொல் கூர்மை எனும் பொருளைத் தருவது ( )

(1) கடி மணம் (2) கடி அம்பு (3) கடியரண் (4) கடிகாவல் (5) கடிமார்பு

17. திடீரென்று மழை பெய்யத் தொடங்கியது. இதில் திடீரென்று என்பது, ( )

(1) இடைச்சொல் (2) வினையெச்சம் (3) வினையடை

(4) ஒலிக்குறிப்புச் சொல் (5) பெயரடை

18. நீ படித்தால் சித்தியடைவாய். - இதில் நீ படித்தால் என்பது, ( )

(1) வேற்றுமைத் தொடர் (2) வாக்கியத்தொடர் (3) கலப்பு வாக்கியம்

(4) வினையெச்சத் தொடர் (5) நிபந்தனை எச்சத்தொடர்

19. பின்வருவனவற்றுள் கலப்பு வாக்கியம், ( )

(1) மகளே நலமுடன் வாழ்க என தந்தை வாழ்த்தினார்.

(2) மகள் நலமுடன் வாழ தந்தை அவளுக்கு வாழ்த்துரை வழங்கினார்.

(3) மகள் தனது தந்தையின் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டாள்.

(4) தனது மகள் நலமுடன் வாழ தந்தை தனது வாழ்த்துக்களை வழங்கினார்.

(5) தான் நலமுடன் வாழ மகள் தந்தையிடமிருந்து வாழ்த்துரை பெற்றுக் கொண்டார்.

20. இரு வேறு எழுவாய் தொக்கி நிற்கும் வாக்கியம் ( )

(1) ஆடி விதை தேடி விதை

(2) உப்பிட்டவரை உள்ளளவும் நினை

(3) இங்கிருந்து போகேன்

(4) பயப்படாதே, தவறாமல் வருவேன்

(5) பகலில் பக்கம் பார்த்துப் பேசு, இரவில் அதுவும் பேசாதே

(1 × 20 = 20 புள்ளிகள்)

**02. (அ) பின்வரும் உரைப்பகுதியின் சாராம்சத்தை ஐம்பது சொற்களில் சுருக்கி எழுதுக.**

தகவல் தொடர்பு ஊடகங்கள் பல உள்ளன வானொலி, திரைப்படம், செய்தித்தாள், இதழ்கள், விளம்பரங்கள், அறிவிப்புக்கள் போன்ற பல்வேறு ஊடகங்களில் தமிழ் மொழி பயன்படுத்தப்பட்டு வருவதை நாம் அறிவோம். கல்வியறிவு குறைந்த மக்களையே பெரும்பான்மையினராகக் கொண்ட இந்தச் சூழலில் மக்கள் தகவல் தொடர்பானது மிகவும் சிறப்பான பணியாற்றிட வேண்டியுள்ளது.

மக்கள், தகவல் தொடர்பு வாயிலாக 'மக்கள் கல்வித் திட்டங்களை' மேற்கொள்ள வேண்டியது நமது இன்றியமையாத கடமைகளில் ஒன்றாகும். செய்திப் பரிமாற்றத்தினை இத்தகைய ஊடகங்களில் நாம் வெற்றி பெற்றிட வேண்டுமெனில் இந்த மக்களிற் பெரும்பான்மையினரின்

சமுதாயப் பின்புலத்தைக் கருத்திற்கொண்டு அதற்கேற்றவாறு மொழிப் பயன்பாட்டைத் திட்டமிட வேண்டும். கல்வி, பொருளாதார நிலை தொழில், வயது, பால், மதம் போன்ற பல்வேறு சமுதாயக் காரணிகளால் அணிதிரளும் மக்களுக்கென அவரவர் தேவைகளை ஈடுசெய்யும் நோக்கில் பல்வேறு நிகழ்ச்சிகள், செய்திகள், அறிவிப்புக்கள் போன்றன அளிக்கப்படுகின்றன. இத்தகைய சமுதாயக்காரணிகள் யாவும் மக்களைப் பாகுபாடுசெய்து பிரிப்பதால் அவர்கள் பின்புலத்திற்கேற்ப மொழித்தேர்வு செய்யப்படல் வேண்டும். மொழியைத் தரப்படுத்தும் கொள்கைகளின் அடிப்படையில் தரப்படுத்தப்பட்ட பயன்பாடுகளை/வழக்குகளைப் பயன்படுத்திட மொழிவல்லுநர்கள், மொழித்திட்டமிடுவோர் செயற்பட வேண்டும். மொழிப் பயன்பாடும் அதன் தரமும் அனைத்து மக்கட் பிரிவினருக்கும் அனைத்து ஊடகங்களுக்கும் ஒரே மாதிரி இருந்திட முடியாது. ஒவ்வோர் ஊடகமும் ஒவ்வொரு குறிப்பிட்ட ஒழுங்கு முறையின்கீழ் வருவதாலும் அவற்றுக்கென்று தனிப்பட்ட குறிக்கோள்கள் இருப்பதாலும் நாம் இவ்வாறு செய்ய வேண்டியுள்ளது. எனவே மக்கள் தொடர்பு ஊடகங்களுக்குக் கொடுக்கப்படும் தரவுகள் வெவ்வேறாக இருந்திட வேண்டியுள்ளது.

இதில் நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு முக்கியமான செய்தி கால அவகாசம் ஆகும். சில வகையான செய்திகள் எவ்வித தாமதமுமின்றி உடனடியாக மக்களுக்கு எடுத்துச்செல்லப்பட வேண்டும். சில புதிய கண்டுபிடிப்புக்களும் முன் முயற்சிகளும் விளக்கமான முறையில் உடனடியாக மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டியிருக்கலாம். இவற்றையெல்லாம் செவ்வனே செய்திட வேண்டுமெனில் மக்கள் தொடர்புச் சாதனங்களின் அனைத்து ஊடகங்களுக்கும் கூர்ந்து நோக்கப்பட்டு செய்திகளின் தன்மைக்கேற்பவும் அவை சென்றடைய வேண்டிய மக்களின் பின்புலத்துக்கேற்பவும் தேர்வு செய்யப்பட வேண்டும். ஊடகங்களும் மொழியும் ஏதாவதொரு வடிவத்தில் பயன்படுத்துகின்றன என்பதை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

(13 புள்ளிகள்)

**(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

கலைகளை பொதுவாக இரண்டு வகைகளிற் பிரிக்கலாம். சில கலை வகைகள் அறிவினாலேயே தெரிந்து பழகி இன்புறத்தக்கவை. அக்கலைகள் கொண்டு உடம்பு முயற்சியினால் தொழில் செய்ய இயலாது. இலக்கியம், இசை முதலியன இவ்வகையில் அடங்கும். சில கலைகள் அறிவினால் அறிந்து இன்புறுதலோடு உடம்பு முயற்சியினாலும் தொழில்கள் செய்து கொள்ளத்தக்கவை. பெரும்பாலும் மண், நீர், தீ, காற்று, வானம் என்னும் ஐந்து முதற்பொருள்களைப் பற்றி ஆராய்கின்ற இயற்கைப் பொருள் ஆராய்ச்சிகள் தொழில்கள் செய்வதற்கும் உதவும். இங்ஙனம் அறிவின்பத்திற்கு மட்டும் ஏதுவான கலையைப் பொதுவாக உணர்வுக் கலை என்றும் தொழிலுக்கு ஏதுவான கலையைப் பொருட்கலை என்றும் சொல்லலாம்.

சங்ககாலத்திலிருந்து தமிழ்மக்கள் இவ்விருவகைக் கலைகளிலும் வளம் பெற்றிருந்தனர். இவற்றைப் பற்றிக் கலை நூல்களும் அப்போது தனித்தனியே இயற்றப்பட்டிருந்தன. அதனால் அவர்களுக்கு அறிவு வளம், தொழில்வளம் என்னும் இருவகை வளங்களுஞ் செழித்திருந்தன. புறநானூற்றில், “...விசும்பின் வலவன் ஏவா வான வூர்தி..” என்று வருகின்ற வரிகளில் வானவூர்தியைப் பற்றி குறிப்பு வருகின்றது. இங்கே குறிப்பிடப்படுகின்ற ‘வானவூர்தி’ பாகனும் உடனிருந்து அவ்வப்போது இயக்கிக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயம் இல்லாதது. புலவர்களாற் பாடப்பெறுகின்ற தகுதியுடையோர் இத்தகைய வலவன் ஏவா வானவூர்தியிற் செல்லும் பெருமையை அடைவார்கள் என்று இந்நூல் கூறுகின்றது. ‘வலவன் ஏவா வானவூர்தி’ என்று இங்கே வருதலின் வலவன் ஏவும் வானவூர்திகளும் வேறே இருந்திருக்குமென்று தோன்றக் கூடும். இங்ஙனம் பாகன் உடன்செல்லாது,

ஓரிடத்திலிருந்தே இயக்கிவிடும் வான் பொறிகளும், உடன் சென்று இயக்கும் வான் பொறிகளும் அமைத்துச் செல்வதற்குப் பொருட்கலை அறிவு மிகுதியாகத் தேவையாயிருக்கும் என்பது சொல்லாமலே அமையும்.

இனி, மேலே சொன்ன உணர்வுக்கலை, பொருட்கலை என்னும் இவ்விரண்டிலும் தனித்தனியே இரண்டிரண்டு பிரிவுகள் கொள்ளலாம். உணர்வுக் கலையிலும் இருவகை; பொருட்கலையிலும் இருவகை உணர்வுக் கலை என்பது மெய்யுணர்வுக் கலை என்றும், இன்பவுணர்வுக்கலை என்றும் பிரிவுபடும். 'மெய்யுணர்வுக் கலை'யானது, முற்றிலும் உணர்வு நிலையிலேயே உணரப்படுவது. சமயம், மெய்ப்பொருள் இவையும் உணர்வின்பத்தை தருபனவே. ஆனாலும், பொருள்களின் வாயிலாக அவ்வின்பத்தைப் பெறவேண்டியிருக்கின்றது. இனிப்பொருட்கலை என்பது மேலே சொன்ன மண் முதலான ஐம்முதற் பொருள்களின் ஆராய்ச்சிகள் என்றும், அவற்றை வாழ்க்கைக்குப் பயன்படுத்தும் முறைகள் என்றும் இருவகையாகக் கொள்ளலாம். வானநூல் போன்றன முன்வகையிலும், கோள்நூல் போன்றன பின்வகையிலும் சேர்ந்தவை. இங்ஙனம் கலைகளை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்தறியலாம்.

i. சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் அறிவு, தொழில் நிலைகளில் வளம் பெற்றுத் திகழ்ந்தமைக்கான அடிப்படைகள் யாவை?
ii. பொருட்கலை எவற்றிற்குத் துணைநிற்கின்றது?
iii. மெய்யுணர்வுக் கலையிலிருந்து இன்பவுணர்வுக் கலை எவ்வகையில் வேறுபடுகின்றது?
iv. வானநூல், கோள்நூல் என்பன பொருட் கலையின் எவ்வகைப் பிரிவுகளுக்கான எடுத்துக்காட்டுக்களாக அமைகின்றன?
v. 'வலவன் ஏவா வானவூர்தி' என்ற தொடரின் மூலம் கட்டுரையாசிரியர் எவ்வகையான முடிவுகளை முன்வைத்துள்ளார்?
vi. புறநானூற்றில் வெளிப்படும் வானவூர்தியின் சிறப்பு யாது?

(12 புள்ளிகள்)

**03. மேல்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.**

(அ). கல்வித்துறையில் நவீன தொழில்நுட்பத்தின் பங்கு.
(ஆ). இயற்கை அனர்த்தங்களும் பாதுகாப்பும்.
(இ). முத்தமிழின் முக்கியத்துவம்.
(ஈ). இலங்கைச் சுற்றுலாத்துறை வளர்ச்சியும் சாவல்களும்.
(உ). "நாட்டார் கலைகளை வணங்கிப் போற்றுவோம்"

(25 புள்ளிகள்)

## பகுதி II

**04.** (அ). சங்ககால ஆற்றுப்படை நூல்களையும், அவற்றின் பொருள்மரபுகளையும் தருக.
(ஆ). பக்தி இலக்கியங்களில் காணப்படும் சங்ககால புறத்தினை மரபு.
(இ). சங்ககால இலக்கியங்களின் தனித்துவமான பண்புகளை துலக்குக.

(15 புள்ளிகள்)

**05.** (அ). சோழர்காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்களும், அவற்றின் பண்புகளும்.

(ஆ). சோழர்காலம் ஒரு தொகுப்பிலக்கிய காலம் என்பதை ஆராய்க.

(இ). சோழர்காலப் பேரிலக்கியங்கள் பற்றி ஆராய்க.

(15 புள்ளிகள்)

**06.** (அ). ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த தமிழ் இலக்கியங்களை வகைப்படுத்துக.

(ஆ). ஒல்லாந்தர் காலத்தில் அதிக இலக்கியங்கள் எழுந்தமைக்கான காரணங்கள்.

(இ). ஈழத்து இலக்கிய வரலாற்றில் கூழங்கைத் தம்பிரானின் தமிழ்ப்பணி.

(15 புள்ளிகள்)

**07**. மேல்வருவோருள் யாரேனும் **இருவரது** இலக்கியப் பங்களிப்பை மதிப்பிடுக.

(அ). நீலாவணன்.

(ஆ). வீரமாமுனிவர்

(இ). தாமோதரம் பிள்ளை

(ஈ). பேராசிரியர் வி. செல்வநாயகம்

(உ). இ. முருகையன்

(15 புள்ளிகள்)

**08**. (அ).

i. ‘காலஞ்சென்ற கந்தசாமியின் அப்பாவை எனக்கு தெரியாது’ இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள பொருள்மயக்கத்தை சுட்டிக்காட்டி திருத்தி எழுதுக.

ii. தன்மைப் பெயர்கள் இரண்டினைத் தந்து அவை வேற்றுமை உருபு ஏற்கும் போது அடையும் மாற்றங்களை விளக்குக.

iii. ஏவல் வினைக்கும் வியங்கோள் வினைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை விளக்குக.

iv. வேற்றுமைத் தொகையை உதாரணந் தந்து விளக்குக.

v. கிளி + கூடு, பசு + பால் என்பன விகாரப்பட்டு புணர்வதற்கு ஒவ்வொரு உதாரண வாக்கியம் தருக

(10 புள்ளிகள்)

(ஆ). பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்றைப்பற்றி சிறுகுறிப்பு** வரைக.

i. நான்காம் வேற்றுமை

ii. உயிர்த்தொடர் குற்றியலுகரமும், நெடில்த்தொடர் குற்றியலுகரமும்

iii. வினா எழுத்துக்களும் பொருளுணர்த்தும் முறையும்

(10 + 5 = 15 புள்ளிகள்)

# "க.பொ.த உயர்தரப் பரீட்சை வினாத்தாள்கள் ஒரே பார்வையில்"
# T72 - தமிழ்

கடந்தகால வினாக்கள் வினாவப்பட்ட முறைமையினையும், பாடப்பரப்புக்களின் பகுதிகளையும் இனங்கண்டு தெளிவடைவதனூடாக ஒவ்வொரு வருடமும் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பரீட்சை தொடர்பான பூரண விளக்கத்தைப் பெற்று சிறந்த பெறுபேறுகளை பெற துணையாக அமையும்.

## பத்திரம் I

## பகுதி I

**கட்டாய வினாக்கள்**

**வினா 01**

(அ) **"விளையாடு ஆயமொடு வெண்மணல்.." - நற்றினை (05ஆம் பாடல்)**

1. தோழியின் மதிநுட்பம்
2. உவமையணி
3. காழ், அகைய, விளர், நரலும் எனும் சொற்களின் பொருள்

(ஆ) **"நைவீரலீர் மைந்தீ ரினித்துயரா.." - குகப்படலம் (66ஆம் பாடல்)**

1. சந்தர்ப்பம்.
2. உவமையணி
3. குகனின் சிறப்பு

**வினா 02**

(அ) **"கானப் பறவை கலகலெனு மோசையிலும்.." - பாரதியார் பாடல்கள் (குயிற்பாடல்)**

1. இயற்கை தரும் இசையின்பம்
2. இசையிலூறிக்கிடக்கும் சாதாரண மக்கள் வாழ்வு
3. "மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்.." - எனும் கவிவரிகளின் சிறப்பு
4. "நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியென்.." - எனும் வரியில் இசை அனுபவ வெளிப்பாடு

(ஆ) **நெருக்கடி சிறுகதை - உரைப்பகுதி**

1. தேன் சிட்டுகளின் வாழ்க்கை விபரணம்
2. பயிர்க் கொடி, சீந்தில் கொடி பற்றிய விபரணம்
3. உவமையணி
4. ஆசிரியரின் உரைநடை

**வினா 03** திருக்குறள் - **காலமறிதல்**

1. சிறப்பும், பயனும்
2. காலத்திற்கு பொருத்திருத்தலும், அதன் சிறப்பும்
3. காத்திருந்து கருமத்தை முடித்தல்
4. உவமையணிகள்

**வினா 04** குகப்படலம் - **குகன் பரதனைக் காணச் சென்றது - கண்டு, அவன் நிலையறிந்து வணங்கி புகழுதல்** (27 - 37 வரையான பாடல்கள்)

1. சுமந்திரன் வாயிலாக குகனின் குணப்பண்பு

2. குகன் மனநிலை மாற்றமும், செயற்பாடும்
3. பரதனது துயர் நிலை
4. பரதனது பெருந்தகைமை

**வினா 05** நாவல் - **ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது**

1. ஆலங்கேணி கிராமம்
2. மக்களின் வாழ்க்கை முறை
3. மக்கள் அயற்கிராம மக்களுடன் கொண்ட தொடர்பு
4. தலைமையாசிரியரின் அபிலாசைகள்

**வினா 06** சிறுகதை - **தியாகம்**

1. கதிரேசன் செட்டியார்
2. கதை வளர்ச்சியில் ஷண்முகம்பிள்ளை
3. ஆசிரியர் கையாண்ட எடுத்துரைப்பு

**வினா 07** கட்டுரை - **இலக்கிய விமர்சனம்** (பேராசிரியர் அ. சீனிவாசராகவன் - ஈழம்)

1. ‘நக்கீர விமர்சனம்’ குறித்த ஆசிரியர் கருத்து
2. இலக்கிய விமர்சன வகை
3. இலக்கியத்தின் இயல்பு
4. இலக்கிய விமர்சன கொள்கை

**வினா 08** சிறுகுறிப்பு

1. **சிலப்பதிகாரம்** - ஊர்காண் காதை - ஊழ்வினையின் வலிமை
2. **கோயில் திருப்பதிகம்** - இறைவனின் அருள்
3. **தேம்பாவணி** - காட்சிப்படலம் - முல்லைநில இடையர்கள் மனநிலை, குதுகலம்
4. **காரணமாலை** - மக்க நாட்டின் அற்புதம்
5. **ஈழநாட்டுக் குறம்** - ஈழநாட்டின் பெருமை

## பத்திரம் II

## பகுதி I

**2019 - வினா 01 இலக்கணப் பல்தேர்வு வினாக்கள் 20**

1. இதழ் குவிந்த உயிர்
2. வளைநா மூக்கொலி
3. இடைநிலை மெய் மயக்கம்
4. தோன்றல் விகாரம்
5. குற்றியலுகரம்
6. ஈற்றுப் புணர்ச்சி
7. வினைச் சொல் விகுதி
8. படர்க்கை தற்சுட்டுப் பெயர்
9. பெயர்ச் சொல்
10. கூட்டுப் பெயர்
11. தொழிற் பெயர்
12. பண்புத் தொகை
13. உயர்திணை பலர்பால் பெயர்
14. வேற்றுமைகள்
15. சொல் - இலக்கண விளக்கம்
16. வினையடை
17. செயற்படுபொருள் குன்றிய வாக்கியம்
18. எதிர் மறை வாக்கியம்
19. கூட்டுவினை, பயனில
20. வினா வாக்கியம்

அன்பென்று கொட்டு முரசே

**2019 - வினா 02** (அ). சுருக்கம் - தனிநாயக அடிகள்

(ஆ). கிரகித்தல் - உரைநடை தொடர்பான பந்தி

**2019 - வினா 03 கட்டுரை**

(அ). மொழியாற்றலை வளர்த்தல்

(ஆ). வாசிப்பும் அறிவு வளர்ச்சியும்

(இ). பாடசாலைக் கல்வியும் பிரத்தியேக வகுப்புக்களும்

(ஈ). போதைப்பொருள் வியாபாரமும் அதன் விபரீதமும்

(உ). ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’

## பகுதி II

**2019 - வினா 04 இலக்கிய வரலாறு - சங்கமருவியகாலம்**

(அ). சங்கமருவியகால நூல்கள்

(ஆ). இருண்டகாலம் - விளக்கம்

(இ). காரைக்காலம்மையார்

**2019 - வினா 05 இலக்கிய வரலாறு - பல்லவர் காலம்**

(அ). பக்தி இயக்கத்தில் - நாயன்மார், ஆழ்வார்கள்

(ஆ). சமயம்சாரா இலக்கியங்கள்

(இ). பிள்ளைத்தமிழ் பிரபந்தம் - பக்திஇலக்கிய போக்கு

**2019 - வினா 06 இலக்கிய வரலாறு - பத்தொன்பதாம் நூற்றாண்டு**

(அ). அகராதி

(ஆ). நூற்பதிப்பு

(இ). பத்திரிகை

**2019 - வினா 07 சிறுகுறிப்பு**

(அ). சுவாமி விபுலாநந்தர்

(ஆ). பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

(இ). பேராசிரியர் க. கைலாசபதி

(ஈ). பேராசிரியர் ம. மு. உவைஸ்

**2019 - வினா 08 இலக்கணம்**

(அ). **சுருக்கவிடை**

i. பொருள் மயக்கம் சுட்டி எழுதுதல்

ii. வழுவைச் சுட்டிக்காட்டி திருத்தி எழுதுதல்

iii. சிறுகூற்று வாக்கியங்களை ஒருவாக்கியமாக்குதல்

iv. செய்வினை வாக்கியமாக்குதல்

v. எழுத்துப் பிழைகளைத் திருத்தல்

(ஆ). **சிறுகுறிப்பு - ஒரு தலைப்பு**

i. வினைச் சொல்லின் அடிப்படைப் பண்புகள்

ii. மூவிடப் பெயர்கள்

iii. வேற்றுமைப் புணர்ச்சியும் அல்வழிப் புணர்ச்சியும்

## 2020 க.பொ.த உயர்தர பரீட்சைக்கு அதிகம் கவனிக்க வேண்டிய பகுதிகள்

## பகுதி I

**01. சங்கப் பாடல்**

"ஒருநாள் செல்லலம்.."

"கன்றுதன் பயமுலை.."

"அறுகுளத்து உகுத்தும்.."

**குகப்படலம்**

"குகன் எனும் பெயரிய.."

"எலி எலாம் இப்படை.."

"போன படைத் தலை.."

**02. கவிதைப் பகுதி**

"மானிட சக்தி.."

"கவிஞன்.."

"எல்லாம் உமதே.."

**கிரகித்தல் பகுதி**

"நாவல் - ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கின்றது"

"கட்டுரை - மானுடம் தழுவிய கவிஞர்கள்"

**03. திருக்குறள்**

"குற்றங்கடிதல்.."

"சிற்றினம் சேராமை.."

"பெரியாரைத் துணைக்கோடல்.."

**04. குகப்படலம்**

"பரதனும் பரதனுடன் வந்த சேனையும் கங்கையைக் கடத்தல் 44 - 61"

"பரதனும் தாய்மாரும் குகனுடன் கங்கையைக் கடத்தல் 63 - 71"

"பரதனின் படைகளை கண்டு குகனடைந்த சீற்றமும், படைக்கு இட்ட கட்டளையும் 7 - 23"

**05. சிறுகதை**

அன்பென்று கொட்டு முரசே!

"தேர்.."

"எனக்கு வயது பதின்மூன்று.."

**06. தேம்பாவணி**

"சாந்திக்கு ஏற்பட்ட ஐயங்களும் மரியாளின் பதிலுரையும் 18 - 28"

வெளிப்படும் யேசுபிரபனின் சிறப்புக்கள்

அணிகளை பயன்படுத்துவதில் வீரமாமுனிவருக்குள்ள திறன்

**07. இருதுயரம்** - நாடகம்

தலைப்பிற்கும் கதைக்குமிடையிலான பொருத்தப்பாடு

**08. சிறுகுறிப்பு**

"பாரதியார் - கவிதை"

"நாவல் - ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கின்றது"

"மணிமேகலை - அந்திமாலைச் சிறப்பு"

"இலங்கையாற்றுப்படை"

"தொண்டு - நீலாவணன் கவிதை"

## பகுதி II

**01. இலக்கணம்**

உயிர், மெய் எழுத்துக்களின் உச்சரிப்பு முறை

ககரம், சகரம், தகரம் வேறுவிதமாக உச்சரிக்கப்படல்

உயிரளபெடை, ஒற்றெளபெடை

குற்றியலுகரம், குற்றியலிகரம்

இடைநிலை எழுத்துக்கள்

இடைநிலை மெய்மயக்கம்

பகுபதம்

4, 5, 6ஆம் வேற்றுமை

தொகைநிலைத்தொடர்

உளப்படுத்தா, உளப்படுத்தல் பெயர்

ஓ, ஆவது, கூட இடைச் சொல்

வியங்கோள், எச்ச வினை

ஈற்றுப்புணர்ச்சியும் வகைகளும்

**02. சுருக்கம், கிரகித்தல்**

**03. கட்டுரை**

"கல்வித்துறையில் நவீன தொழில்நுட்பத்தின் பங்கு"

"இயற்கை அனர்த்தங்களும் பாதுகாப்பும்"

"சர்வதேச கல்விமயமாக்கல்"

**04. சோழர் காலம் - சங்ககாலம்**

**05. நாயக்கர் காலம்**

**06. ஒல்லாந்தர்காலம்** - ஈழத்து இலக்கிய வரலாறு

**07. சிறுகுறிப்பு**

அன்பென்று கொட்டு முரசே!

ஆறுமுகநாவலர்

வீரமாமுனிவர்

**08. இலக்கணம்**

தன்வினை, பிறவினை, காரணவினை

மகரக்குறுக்கம்

பெயர்ச்சொல் - பண்புகள்

## பரீட்சைக்கு முகம் கொடுப்பது எப்படி?

-வழிகாட்டல் கருத்துக்கள்-

இன்னுமொரு சில மாதங்களில் G.C.E.(A/L) பரீட்சை எழுதுவதற்காக மிக ஆவலுடனும், ஆர்வத்தடனும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் உங்களோடு சில நிமிடங்கள் உரையாட விரும்பகின்றேன்.

“தேர்வுகள் வாழ்வின் திறவுகோல்கள்” என்பார்கள். பரீட்சைகள் வாழ்வில் அந்தளவு முக்கியமானது. ஆனால் இப் பரீட்சைகளை எப்படி எதிர் கொள்வது என்று தெரியாமல் மாணவர்கள் பிழையான வழிமுறைகளை கைக்கொள்வதை நாம் கடந்த காலங்களில் கண்டிருக்கின்றோம். இவ்வாறான சிரமங்களிலிருந்து மாணவர்களை விடுவிப்பதற்கு இக் கையேடு பயனயிக்கும் என நான் நம்புகின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில் கவனிக்கவேண்டிய முக்கிய சிலவிடயங்களை இங்குநோக்குவோம்.

1. படைத்த கடவுளின் மீது நம்பிக்கை வையுங்கள். அடுத்ததாக உங்களின் ஆற்றலின் மீது நம்பிக்கை வையுங்கள்.

2. ஒவ்வொரு பாடத்திலும் நீங்கள் எடுத்த சுருக்கக் குறிப்புகள் (ளாழசவ ழெவநள) உங்களுடைய கையிலிருக்கும். ஒரு நாளைக்கு ஒரு பாடம் என்றவாறு முக்கியமான, மீட்டவேண்டிய பாடங்களை மீள மீட்டிக்கொள்ளுங்கள். ஏனைய பாடங்களை ஒரு நாளைக்கு இருபாடங்கள் என்றபடி மீட்டிக்கொள்ளலாம்.

3. முடியுமானால் மாதிரி விடையளிக்கும் தாள் ஒன்றைப்பெற்றுக்கொள்ளுங்கள் அல்லது அனுபவம் வாய்ந்தவர்களிடம் மாதிரி விடைத்தாள் ஒன்றைத் தயாரித்துப் பெற்றுக்கொள்ளுங்கள். பின்னர் சுட்டெண் எழுதும் முறை, பக்க எண் எழுதும் முறை, வினா இலக்கத்தைக் குறிக்கும் முறை மற்றும் ஒவ்வொரு புதிய வினாக்களையும் எவ்வாறு ஆரம்பிப்பது என்பன பற்றி ஆசிரியர்களிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

4. பரீட்சை மிகநெருங்கிய நிலையில் சக நண்பர்களுடன் சேர்ந்து கலந்துரையாடுவதைத் தவிர்ந்துகொள்ளுங்கள். இதனால் மன உழைச்சல் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன.

5. பரீட்சை நேர அட்டவணையை பிரதி பண்ணி ஒரு பிரதியைப் படிக்கும் அறையில் உங்களுடைய பார்வை அதிகம் படக்கூடிய இடத்தில் தொங்கவிடுங்கள்.

6. பரீட்சைக்கு ஓரிரு தினங்களுக்கு முன் தாம் பரீட்சை எழுதவிருக்கும் பாடசாலை, அங்குள்ள பரீட்சை மண்டபங்கள், அவற்றில் நீங்கள் அமரும் மண்டபம் எது என்ற விடயங்களை அறிந்து வைத்திருங்கள். பரீட்சை நடைபெறும் முதல் நாளில் ஏற்படக்கூடிய சில வீணாண பிரச்சினைகளைத் தவிர்க்க இது பேருதவியாக அமையும்.

“சிறந்தமுறையில் பரீட்சையில் சித்தியடைந்து கற்றல் பயனத்தை தொடர மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.”

என்றும் நட்புடன்

ஆசிரிய நண்பன் **அநூஷன் இராஜநாயகம்**